தினமணி

**மழையால் பயிர் சேதம்: நிவாரணம் வழங்கக் கோரிக்கை**

First Published : 12 May 2011 12:22:26 PM IST

பழனி, மே 11: பழனி தாலுகா பகுதியில், மழையால் ஏற்பட்ட பயிர் சேதத்துக்கு நிவாரணம் வழங்க, மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

இது குறித்து, மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் ஏரியா கமிட்டி செயலர் அருள்செல்வன், மாவட்ட ஆட்சியர் மற்றும் வேளாண் துறைச் செயலருக்கு விடுத்துள்ள கோரிக்கை கடிதம்:

திண்டுக்கல் மாவட்டம், பழனி தாலுகா பாப்பம்பட்டி, மானூர், கோரிக்கடவு, கீரனூர், வில்வாதம்பட்டி, கோதைமங்கலம், கலிக்கநாயக்கன்பட்டி உள்ளிட்ட பல பகுதிகளில் நெல் உள்ளிட்ட பல்வேறு பயிர்களை ஆயிரக்கணக்கான ஏக்கரில் விவசாயிகள் சாகுபடி செய்திருந்தனர்.

இந்நிலையில், கடந்த மாதம் பெய்த திடீர் மழையால் அறுவடைக்குத் தயாராக இருந்த நெற்பயிர்கள் பெரும் சேதமடைந்தன. இதனால், ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் வரை செலவு செய்திருந்த விவசாயிகள் இழப்பை சந்தித்துள்ளனர்.

எனவே, பாதிப்படைந்த விவசாயிகளுக்கு நஷ்டஈடு வழங்க, தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென தெரிவித்துள்ளார்.

**சூறாவளியால் மாம்பழ விளைச்சல் பாதிப்பு**

வி.என். ராகவன்
First Published : 12 May 2011 12:04:29 PM IST

திருச்சி, மே 11: திருச்சி மாவட்டத்தில் தொடக்கத்தில் விறுவிறுப்பாகத் தொடங்கிய மாம்பழப் பருவம் அண்மையில் சூறாவளியுடன் பெய்த மழையால் முழுமையாகத் தொடருமா? என்ற கேள்வி எழுந்துள்ளது.

மழைக் காலத்தைத் தொடர்ந்து, தை, மாசி மாதங்களில் நிலவும் பனியின் அளவைப் பொருத்தே மா மரங்களில் பூக்கள் பூக்கும். சித்திரை 15-ம் தேதிக்குப் பிறகு தொடங்கும் அறுவடை காலம் ஆடி 18-ம் தேதி வரை தொடருவது வழக்கம்.

மாவட்டத்தில் 2,000 ஹெக்டேரில் மாம்பழச் சாகுபடி மேற்கொள்ளப்படுகிறது. இதில் அதிகபட்சமாக மணப்பாறை, மருங்காபுரி, வையம்பட்டி வட்டாரங்களில் சாகுபடி செய்யப்படுகிறது.

கடந்த ஆண்டு மாவட்டத்தில் ஏற்பட்ட பருவ நிலை பிரச்னை காரணமாக மாம்பழ விளைச்சல் ஏறத்தாழ 60 சதம் வரை பாதிக்கப்பட்டது.

நிகழாண்டு விளைச்சலிலும் சராசரியைவிட ஏறத்தாழ 30 சதம் வரை பாதிப்பு ஏற்பட்டது. காய் பிடிக்கும் தருணத்தில் மார்ச் மாதத்தில் பலமாக வீசிய காற்று, நோய்த் தாக்குதல், நுண்ணூட்டச் சத்து குறைவு போன்றவையே இதற்குக் காரணம் என தோட்டக்கலைத் துறை அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

என்றாலும், நிகழாண்டில் மாம்பழப் பருவம் தொடக்கத்தில் விறுவிறுப்பாக இருந்தது. இதனால், திருச்சி காந்தி சந்தையிலும் மாம்பழ வரத்து பரவலாக இருந்து வருகிறது. எனவே, கடந்த ஆண்டுடன் ஒப்பிடும்போது விலையும் குறைவாக இருக்கிறது.

கடந்த ஆண்டு கிலோ ரூ. 50-க்கு விற்ற செந்தூரா ரகம் இப்போது ரூ. 20 முதல் 25-க்கு விற்கப்படுகிறது. கடந்த ஆண்டு கிலோ ரூ. 60 முதல் ரூ. 100 வரை இருந்த பங்கனபள்ளி இப்போது ரூ. 30 முதல் 40-க்கும், ரூ. 70 முதல் ரூ. 100 வரை இருந்த இமாம்பசந்த் இப்போது ரூ. 40 முதல் 50-க்கும், ரூ. 25 என இருந்த கல்லாமணி இப்போது ரூ. 12 முதல் 15-க்கும் விற்பனையாகின்றன.

இந்நிலையில், கடந்த 10 நாள்களுக்கு முன்பு சூறாவளியுடன் பெய்த மழையால் மாம்பழ விளைச்சலில் மேலும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. எனவே, இனிமேல் மகசூல் இருக்குமா? என்ற சந்தேகம் விவசாயிகளிடையே எழுந்துள்ளது.

இதுகுறித்து மாம்பழ விவசாயிகள் கூறியது:

"பருவம் தொடங்கியபோது விளைச்சல் பரவலாக இருந்தது. இந்நிலையில், அண்மையில் இரு முறை சூறாவளியுடன் பெய்த மழையால் மா மரங்களில் இருந்த பூக்கள், பிஞ்சுகள் கொட்டிவிட்டன. இதனால், 50 சதம் வரை பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

எனவே, மீண்டும் உரம் இட வேண்டிய நிலை உள்ளதால், கூடுதலாக செலவும் ஏற்படுகிறது. இதனால், ரூ. ஒரு லட்சம் கொடுத்து குத்தகைக்கு எடுக்கப்பட்ட தோட்டத்தில் இப்போது ரூ. 50,000 முதல் ரூ. 75,000 வரைதான் கிடைக்கும் நிலை உள்ளது. எனவே, நிகழாண்டும் நஷ்டத்தை சந்திக்க வேண்டிய சூழலே உள்ளது' என்றனர் விவசாயிகள்.

இதேபோல, காந்தி சந்தையிலும் வரத்து குறைய வாய்ப்புள்ளது என வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

காந்தி சந்தைக்கு உள்ளூர், நாமக்கல், சேலம் உள்ளிட்ட மாவட்டங்களிருந்தும் மாம்பழ வரத்து இருக்கும். ஆனி, ஆடி மாதங்களில் ஆந்திர மாநிலத்திலிருந்தும் மாம்பழங்கள் வரும்.

இப்போது, காந்தி சந்தைக்கு திருச்சி மாவட்டத்தில் உள்ள துவரங்குறிச்சி, நாமக்கல் மாவட்டத்திலுள்ள சேந்தமங்கலத்திலிருந்தும் மாம்பழங்கள் வருகின்றன. இந்த வரத்து

தொடருமா? என்பது கேள்விக்குறியாக உள்ளது என காந்தி சந்தை நெல்பேட்டைத் தெரு பழ வியாபாரிகள் தெரிவித்தனர்.

இதுகுறித்து வியாபாரிகள் மேலும் கூறியது:

"பருவம் தொடங்கியபோது, மாம்பழ வரத்து அதிகமாக இருந்தது. ஆனால், சூறாவளியால் மா மரங்களில் வடுக்கள் (பிஞ்சுகள்) கொட்டி விட்டன. எனவே, இப்போதைய நிலவரப்படி மாம்பழ வரத்து மே மாத இறுதி வரை மட்டுமே பரவலாக இருக்கும்.

நிகழாண்டு ஆந்திர மாநிலத்திலும் காய்ப்பு குறைவாக இருப்பதாகக் கூறப்படுகிறது. இதனால், அங்கிருந்தும் மாம்பழ வரத்து இருக்க வாய்ப்பில்லை எனத் தெரிகிறது. எனவே, நிகழாண்டு ஆடி மாதம் வரையில் மாம்பழ வரத்து இருக்குமா? என்பது கேள்விக்குறியாக இருக்கிறது' என்றனர் வியாபாரிகள்.

தினமலர்

**சென்ற ஏப்ரல் மாதத்தில் ரப்பர் உற்பத்தி 6.2 சதவீதம் வளர்ச்சி**

மே 13,2011,00:15



கொச்சி: சென்ற ஏப்ரல் மாதத்தில், ரப்பர் உற்பத்தி, 56 ஆயிரத்து 800 டன்னாக அதிகரித்துள்ளது. இது, சென்ற ஆண்டின் இதே மாதத்தில் இருந்த உற்பத்தியை விட, 6.2 சதவீதம் (53 ஆயிரத்து 500 டன்) அதிகம்.

சென்ற ஏப்ரல் மாதத்தில், ரப்பர் மரங்கள் அதிகமுள்ள பகுதிகளில் பெய்த மழையால், ரப்பர் உற்பத்தி அதிகரித்துள்ளது என, ரப்பர் வாரியத்தின் உயரதிகாரி தெரிவித்தார். இதே மாதங்களில், ரப்பர் பயன்பாடு, தற்காலிக புள்ளி விவரத்தின் படி, 78 ஆயிரத்து 250 டன் என்ற அளவிலிருந்து, 82 ஆயிரத்து 500 டன்னாக உயர்ந்துள்ளது.

கடந்த ஆண்டு, ஏப்ரல் மாத இறுதி நிலவரப்படி, ரப்பர் கையிருப்பு, 1 லட்சத்து 96 ஆயிரத்து 15 டன்னாக இருந்தது. இது, நடப்பாண்டு ஏப்ரல் மாத இறுதியில், 2 லட்சத்து 50 ஆயிரத்து 250 டன்னாக உயர்ந்திருந்தது. கடந்த 2010-11ம் நிதியாண்டு இறுதியில், ரப்பர் கையிருப்பு, 2 லட்சத்து 76 ஆயிரத்து 110 டன்னாக இருந்தது.உள்நாடு மற்றும் சர்வதேச அளவில், இயற்கை ரப்பரின் விலை, பன் மடங்கு அதிகரித்துள்ளது. இது, ரப்பர் விவசாயிகளுக்கு அதிக ஆதாயம் அளிப்பதாக உள்ளது. இந்நிலையில், ரப்பர் அதிகளவில் உற்பத்தியாகும் கேரளாவில், ரப்பர் பால் வடிப்பிற்கு ஆட்கள் கிடைப்பதில்லை. இதனால், ரப்பர் சாகுபடியில் ஈடுபட்டு வரும் பல குடும்பங்கள், ரப்பர் பால் வடிப்பை நிறுத்தியிருந்தன.

ஆனால், தற்போது இதற்கு நல்ல விலை கிடைப்பதால், குடும்ப உறுப்பினர்களே ரப்பர் பால் வடிப்பில் களம் இறங்கியுள்ளனர் என, விவசாயி ஒருவர் தெரிவித்தார்.கடந்த 2010-11ம் நிதியாண்டில், நாட்டின் ரப்பர் உற்பத்தி, 8 லட்சத்து 61 ஆயிரத்து 950 டன்னாக இருந்தது. அதேசமயம், இவ்வாண்டில் ரப்பர் பயன்பாடு, 9 லட்சத்து 49 ஆயிரத்து 205 டன்னாக இருந்தது. நடப்பாண்டில், ரப்பர் பால் வடிப்பு அதிகரித்துள்ளதால், இவ்வாண்டில் ரப்பர் உற்பத்தி, 9 லட்சத்து 2 ஆயிரம் டன்னாக அதிகரிக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.

ரப்பர் உற்பத்தி அதிகரித்து வரும் அதே நேரத்தில், ரப்பர் பயன்பாடும் உயர்ந்து வருகிறது. தேவையை பூர்த்தி செய்யும் அளவிற்கு, ரப்பர் உற்பத்தி இல்லாததால், நம் நாடு ரப்பரை இறக்குமதி செய்து வருகிறது. இருப்பினும், நடப்பு 2011-12ம் நிதியாண்டில், நாட்டின் ரப்பர் இறக்குமதி, 1 லட்சத்து 20 ஆயிரம் டன்னாக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது.அதேசமயம், சென்ற 2010- 11ம் நிதியாண்டில், ரப்பர் இறக்குமதி, 1 லட்சத்து 77 ஆயிரத்து 637 டன்னாக இருந்தது. சென்ற 2010ம் ஆண்டு ஏப்ரலில் ரப்பர் இறக்குமதி, 10 ஆயிரத்து 876 டன்னாக மிகவும் அதிகரித்து காணப்பட்டது.

இதே மாதங்களில் ரப்பர் ஏற்றுமதி, 2,227 டன்னிலிருந்து 1,043 டன்னாக குறைந்துள்ளது. சென்ற 2010 -11ம் நிதியாண்டில், நாட்டின் ரப்பர் ஏற்றுமதி, 29 ஆயிரத்து 851 டன்னாக இருந்தது. இது, நடப்பு 2011-12ம் நிதியாண்டில், 50 ஆயிரம் டன்னாக உயரும் என, மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

**உணவுப் பொருள் பணவீக்கம் 7.7 சதவீதமாக குறைந்தது**

மே 13,2011,00:19



புதுடில்லி: நாட்டின் உணவுப் பொருள் பணவீக்கம், கடந்த 18 மாதங்களில் இல்லாத அளவிற்கு, சென்ற ஏப்ரல் 30ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், 7.7 சதவீதமாக குறைந்துள்ளது. இது, இதற்கு முந்தைய வாரத்தில், 8.53 சதவீதம் என்ற அளவில் அதிகரித்து காணப்பட்டது. நாட்டில் பெரும்பாலான விளை பொருள்களின் உற்பத்தி, எதிர்பார்த்ததை விட அதிகரித்துள்ளதால், உணவுப் பொருள் பணவீக்கம் குறைந்துள்ளது.

நடப்பு பயிர் பருவத்தில் (ஜூன் - ஜூலை), நாட்டின் உணவுதானியங்கள் உற்பத்தி, 23.58 கோடி டன் என்ற சாதனை அளவை எட்டும் என மதிப்பிடப்பட்டுள்ளது. இது, கோதுமை, பருப்பு வகைகள், மக்காச் சோளம் ஆகியவற்றின் அபரிமிதமான உற்பத்தியால் சாத்தியமாகியுள்ளது. இதுதவிர, நாட்டின் எண்ணெ# வித்துக்கள் உற்பத்தியும், 3.02 கோடி டன் என்ற சாதனை அளவை எட்டியுள்ளது.

கணக்கீடு செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், பருப்பு வகைகள், தேயிலை, காய்கறிகள் போன்றவற்றின் விலை குறைந்திருந்தது. குறிப்பாக, உருளைக் கிழங்கின் விலை, சென்ற ஆண்டின் இதே வாரத்துடன் ஒப்பிடும் போது, 3.58 சதவீதம் குறைந்திருந்தது.எரிபொருள்களுக்கான குறியீட்டு எண், முந்தைய வாரத்தை விட, ஏப்ரல் 30ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், 12.25 சதவீதமாக சரிவடைந்திருந்தது.

உணவுப் பொருள் பணவீக்கத்தை பொறுத்தவரையில், கணக்கீடு செய்வதற்கு எடுத்து கொள்ளப்பட்ட வாரத்தில், மீன்கள் ( 5 சதவீதம்), முட்டை (3 சதவீதம்), பார்லி (2 சதவீதம்), ராகி, கம்பு, ஊறுகாய் வகைகள் மற்றும் நறுமணப் பொருள்கள் ( தலா 1 சதவீதம்) போன்றவற்றின் விலை உயர்ந்திருந்தது. அதேசமயம், கறிக்கோழி (4 சதவீதம்), தேயிலை மற்றும் துவரம் பருப்பு (2

சதவீதம்), கடலை பருப்பு, உளுந்து (தலா 1 சதவீதம்) ஆகியவற்றின் விலை குறைந்திருந்தது.மேலும், சூரிய காந்தி (2 சதவீதம்), கச்சா ரப்பர், ஆமணக்கு விதை, ஆளி விதை (தலா 1 சதவீதம்) போன்றவற்றின் விலையும் குறைந்திருந்தது.

உணவுப் பொருள் பணவீக்கம் குறைந்துள்ளதை, வரவேற்றுள்ள மத்திய நிதியமைச்சர் பிரணாப்முகர்ஜி, ' வரும் வாரங்களில், உணவுப் பொருள் பணவீக்கம் மேலும் குறையும். எனினும், உணவு சாராத பொருள்களின் விலை உயர்வு கவலைக்குரியது' என்று தெரிவித்தார்.மதிப்பீடு செ#வதற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட வாரத்தில், உணவு சாரா பொருள்களின் பணவீக்கம், 28.62 சதவீதமாக உள்ளது. நூலிழை விலை 86 சதவீதமும், கனிமங்களின் விலை 12 சதவீதமும் உயர்ந்துள்ளது. எரிபொருள் மற்றும் மின்சாரம் விலை, 14.91 சதவீதம் அதிகரித்துள்ளது.

மொத்த விலை குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும், நாட்டின் பொதுப் பணவீக்கம், சென்ற மார்ச் மாதத்தில், 8.98 சதவீதம் என்ற அளவில் மிகவும் அதிகரித்து காணப்பட்டது. அதேசமயம், மத்திய அரசு, பணவீக்க விகிதம் மார்ச் மாதத்தில், 8 சதவீதம் என்ற அளவில் இருக்கும் என, முதலில் மதிப்பீடு செய்திருந்தது.நாட்டின் பணவீக்கத்தை கட்டுக்குள் கொண்டு வரும் வகையில், ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கான வட்டி விகிதத்தை, கடந்த 2010ம் ஆண்டு மார்ச் முதல், ஒன்பது முறை உயர்த்தியுள்ளது. இறுதியாக, கடந்த வாரம் வட்டி விகிதம், 0.50 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**வேளாண்மை அலுவலர்கள் சங்கத்தில் முப்பெரும் விழா**

பதிவு செய்த நாள் : மே 13,2011,01:57 IST

கோவில்பட்டி : தேசிய உணவு பாதுகாப்பு குழுமத்தின் திரவ பூச்சிக்கொல்லி மருந்தை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென கோவில்பட்டியில் நடந்த வேளாண்மை அலுவலர்கள் சங்க முப்பெரும் விழாவில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

தமிழ்நாடு வேளாண்மை அலுவலர்கள் சங்கத்தின் சார்பில் ஓய்வு பெற்ற உறுப்பினர்கள், புதிய உறுப்பினர்கள், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள் ஆகியோரை பாராட்டும் முப்பெரும் விழா நடந்தது. கோவில்பட்டி அண்ணா பஸ் ஸ்டாண்ட் அருகிலுள்ள எம்எஸ்பி திருமண மண்டபத்தில் நடந்த விழாவிற்கு தமிழ்நாடு வோண்மை அலுவலர் சங்க மாநில தலைவர் இசக்கிமுத்து தலைமை வகித்தார்.

மாவட்ட துணை தலைவர் சங்கரநாராயணன் முன்னிலை வகித்தார். தொடர்ந்து சங்க நிர்வாகிகள், அரசின் பல்வேறு ஊழியர் சங்கத்தினர் கலந்து கொண்டு பேசினர்.

மேலும் மாவட்ட சங்க கோரிக்கைகளை தொடர்ந்து நிராகரித்து வரும் தூத்துக்குடி இணை இயக்குநருக்கு கண்டனம் தெரிவித்தும், கிடங்கு மேலாளர் காலிப்பணியிட பொறுப்புகளை களப்பணியாளர்களுக்கு கொடுப்பதால் களப்பணிகள் பாதிக்கப்படுவதை கருத்தில் கொண்டு அது குறித்த உத்தரவை ரத்து செய்ய வலியுறுத்தியும், தேசிய உணவு பாதுகாப்பு குழுமத் திட்டத்தில் விநியோகம் செய்யப்படும் திரவ பூச்சிக்கொல்லி மருந்தால் எந்தவித பயனும் ஏற்படவில்லையென விவசாயிகள் தெரிவிப்பதால் மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்பது உட்பட சுமார் 14 அம்ச தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

விழாவில் மாநில கொள்கை பரப்பு செயலாளர் சண்முகம், மாநில இணைச்செயலாளர் துரை அருளானந்தம், மாவட்ட செயலாளர் மணிராஜ், பொருளாளர் ஜெபதுரை, அரசு ஊழியர் சங்க தலைவர் முத்துசாமி, செயலாளர் சின்னத்தம்பி, மகளிரணி செயலாளர் ரேவதி, ஊரக வளர்ச்சித்துறை மாவட்ட செயலாளர் பாலஅரிஹரமோகன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**ஒரு வாரமாக காய் விற்பனை மந்தம்**

பதிவு செய்த நாள் : மே 13,2011,02:12 IST

ஈரோடு: ஈரோட்டில் ஒருவாரமாக காய்கறி விற்பனை மந்தமாகவே உள்ளதால், வியாபாரிகளிடையே பெரும் கலக்கத்தை ஏற்படுத்தி உள்ளனர். ஈரோடு மாநகரில் நேதாஜி பெரியமார்க்கெட், சின்ன மார்க்கெட் ஆகிய இரண்டு காய்கறி மார்க்கெட்கள் உள்ளன. இங்கிருந்து சிறு வியாபாரிள், தள்ளுவண்டிக்காரர்கள் காய்கறி வாங்கிச் செல்கின்றனர்.

பெரும்பாலும், ஈரோடு மாவட்ட சுற்றுவட்டார பகுதியைவிட, ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழகத்தில் பிற மாவட்டங்களில் இருந்து அதிகளவில் காய்கறி வருகிறது. வரத்தை பொறுத்து விலை நிர்ணயிக்கப்பட்டு, கடைகளுக்கு விற்பனை நடக்கிறது. கத்திரி வெயில் துவக்கத்தில் இருந்து காய்வரத்து வெகுவாக குறைந்து வருகிறது. வெயிலின் தாக்கம் அதிகரித்துள்ள நிலையில் மக்கள் அதிகமாக பழங்களையே வாங்கி செல்கின்றனர்.

ஈரோடு பெரியமார்க்கெட் காய் வியாபாரி மன்சூர் கூறியதாவது: கேரளா, ஊட்டி, ஆந்திரா, கர்நாடகா மற்றும் தமிழகத்தில் ஒசூர், கிருஷ்ணகிரி ஆகிய பகுதிகளில் இருந்து கேரட், பீட்ரூட், உருளை, முட்டைகோஸ், சேனை, தக்காளி, காலிஃப்ளவர், சிவப்பு முள்ளங்கி ஆகிய பல்வேறு காய்

ரகங்கள் வருகிறது. வெயில் தாக்கத்தால், காய்கறிகள் வறண்டு, சுவையும் குறைவாகவே உள்ளது. இதனால், வாடிக்கையாளர்கள் காய்கறிகளை குறைவாகவே வாங்கிச் சென்று ஃபிரிட்ஜில் வைக்கின்றனர். ஒரு வாரமாக மார்க்கெட்டில் காய் விற்பனை மந்தமாகவே உள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**விலை இறங்காத மலை வாழைக்காய்**

பதிவு செய்த நாள் : மே 12,2011,22:35 IST

தாண்டிக்குடி : தாண்டிக்குடி கீழ்மலைப்பகுதியில், மருத்துவ குணம் கொண்ட மலை வாழைக்காய், 10 ஆயிரம் ஏக்கரில் பயிர் செய்யப்பட்டுள்ளது. முடிகொத்து, வாடல் நோய் தாக்குதல் இருந்த போதும், சாகுபடி குறைவதில்லை. மேயில் துவங்கும் மாம்பழம் சீசனையடுத்து, அனைத்து பழங்களின் விலையும் சரியும்.

நடப்பு ஆண்டில், மலை வாழைக்காய் விலை சீராக உள்ளது. கடந்த ஆண்டில் முதல் தர வாழைக்காய் ஒன்று ரூ.4 க்கு விற்றது. மற்றவை ரூ.1 முதல் 2 வரை மட்டுமே விற்றன. தற்போது (400 காய்கள் ) கொண்ட பொதி முதல் தரம் ரூ.2,000 வரையும்; மற்றவை ரூ. 1,600 வரை விற்கிறது. இவை சென்னை, திருச்சி, மதுரை சந்தைகளுக்கு விற்பனைக்கு செல்கின்றன. மாம்பழ சீசனால் விலை சரியும் என்ற அச்சத்தில் இருந்த விவசாயிகளுக்கு, சீரான விலை, மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

**விளைச்சல் பாதிப்பு: முந்திரி விலை உயர்வு**

பதிவு செய்த நாள் : மே 12,2011,22:51 IST

காரைக்குடி : முந்திரி விளைச்சல் குறைவால் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. காரைக்குடி, கல்லல், புதுவயல் பகுதிகளில் இரண்டாயிரத்து 804 எக்டேரில் முந்திரி சாகுபடி செய்யப்பட்டுள்ளது. தற்போது பருவ மழை பொய்த்து போனதால் முந்திரி விளைச்சலில் திடீர் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. தேயிலை கொசு எனப்படும் நோய் தாக்குதலால் பூ கருகி, உதிர்ந்து விடுகிறது. இதனால் காய் விளைச்சல் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளது.

எதிர்பார்த்த விளைச்சல் இல்லாததால் பெரும்பாலான விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். * விவசாயி ஒருவர் கூறுகையில், ""எக்டேருக்கு 150 மரங்கள் நடப்பட்டுள்ளன. ஜனவரி, பிப்., மாதத்தில் பூப்பூக்கும். மார்ச் மாதம் காய் காய்க்கும். நடப்பாண்டு பருவ மழை பொய்த்து

போனதால் போதிய விளைச்சல் இல்லை. சூரை நோய் தாக்குதலால் காய்கள் முதிர்ச்சியடையாமல், பிஞ்சு பருவத்தில் உதிர்ந்து விடுகிறது. இதுபோன்ற பல்வேறு காரணங்களால் முந்திரி பருப்பு விலை உயரும் அபாயம்" உள்ளது. என்றார்.